பக்கங்கள்:-27

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 19 | செவ்வாய்க்கிழமை | 03.03.2026 | அதிர்வு 215

## ட்ரம்ப்பின் செயலுக்கு ரணில் கடும் கண்டனம்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர் 06



# ஒரே குடையின் கீழ் தமிழ்க் கட்சிகள்!

## தீர்வுக்குப் புதிய சட்டக் கட்டமைப்பை உருவாக்கும் சட்டத்தரணிகள் பேரவை

தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து நீண்டகால இனப்பிரச்சினைக்கு ஒரு நிலையான அரசியல் தீர்வை எட்டுவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக சிதறிக் கிடக்கும் தமிழ்க் கட்சிகளின் பலத்தை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பலமான முறையில் முன்னிறுத்துவதற்குத் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் விசேட கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. 09

# இங்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது! வதந்திகளை நம்பி முண்டியடிக்காதீர்கள்!!



## பாதுகாப்பான கடல் வழிகளிலேயே கப்பல்கள் இலங்கைக்கு வருகின்றன என்றும் அரசு விளக்கம்

இலங்கையில் போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதால், தட்டுப்பாடு குறித்துப் பொதுமக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்று அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, இது தொடர்பான மேலதிக விவரங்களை வெளியிட்டார்.

அமைச்சரின் அறிவிப்பில் உள்ள முக்கிய விடயங்கள்:–

**விநியோகம் பாதிக்கப்படாது**

மத்திய கிழக்கில் நிலவும் 09




“யுத்த காலங்களில் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் போன்ற தரப்புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட வேண்டும்.”

– இவ்வாறு கோரிக்கை முன்வைத்திருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

இந்தச் செய்தி நேற்றுக் காலை முரசில் முதலாம் பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியாகியிருந்தது.

அதனைப் பார்த்ததும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சமூக ஊடகங்கள் மூலம் எதிர் வினையாற்றியிருக்கின்றார்.

‘நல்லாட்சி அரசில் முட்டுக்கொடுத்த காலத்தில் ஏன் இதனை செய்யவில்லை..?’ – என்று ஹக்கீமை நோக்கிக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் அவர்.

“ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீம் 06




# மீண்டும் மிதக்கும் ‘சிவகங்கை’

## காங்கேசன்துறை – நாகப்பட்டினம் இடையிலான கப்பல் சேவை 6ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை, தற்காலிக இடைநிறுத்தத்திற்குப் பிறகு எதிர்வரும் 6ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் நாகப்பட்டினம் துறைமுகத்திற்கும் இடையே சேவையில் ஈடுபட்டிருந்த “சிவகங்கை“ பயணிகள் கப்பல் சேவை சில காரணங்களுக்காகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திய டைந்துள்ள நிலையில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இச் சேவை வழமை போல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு இரு நாட்டுப் பயணிகளிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தச் சேவைக்கான பயணச் சீட்டு முன்பதிவுகள் மற்றும் பயண நேர அட்டவணைகள் தொடர்பான மேலதிக விவரங்களை அதன் உத்தியோகபூர்வ இணையதளம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு போர்ட் சிட்டி கடலில் யாழ். இளைஞர் சடலமாக மீட்பு!

## இசை நிகழ்ச்சிக்கு வந்தவருக்கு நேர்ந்த கதி என்ன? சி.சி.ரி.வி. காட்சிகளை ஆய்வு செய்யும் பொலிஸார்



கொழும்பு துறைமுக நகர கடற்பரப்பில் மிதந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, உயிரிழந்த இளைஞர் கடந்த 28 ஆம் திகதி கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்துள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த இளைஞர், எவ்வாறு கடலில் சடலமாக மீட்கப்பட்டார் என்பது தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

கடலில் தவறி விழுந்து விபத்துக்குள்ளானாரா? அல்லது வேறு ஏதேனும் அசம்பாவிதங்கள் நடந்ததா? என்பது குறித்து மர்மம் நீடிக்கின்றது.

கடலில் சடலம் மிதப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, கொழும்பு துறைமுகப் பொலிஸார் சடலத்தை மீட்டுப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மரணத்துக்கான உண்மையான காரணம் என்ன என்பதை அறிய பிரேத பரிசோதனை அறிக்கையை எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இசை நிகழ்ச்சிக்கு வந்த நண்பர்கள் அல்லது அங்கிருந்த பாதுகாப்பு கமரா காட்சிகள் மூலம் மேலதிக தகவல்களைப் பெறப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.











# மத்திய கிழக்கு தொழிலாளர்களைப் பாதுகாக்க அநுர அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலில் சிக்கியுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு உச்சகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அனுராதபுரம்,ரன்கெத்தகமபகுதியில் நேற்று மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:–

“நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் முதுகெலும்பாகத் திகழும் பல இலட்சம் தொழிலாளர்கள் மத்திய கிழக்கில் பணிபுரிகின்றனர். தற்போது அங்கு மூண்டுள்ள மோதலால் அவர்களின் உயிர்களுக்கும் வாழ்வாதாரத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு “மூச்சு“ தரும் அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் தலையாய கடமையாகும்.

ரணசிங்க பிரேமதாஸவால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைச் சீருடை மற்றும் மதிய உணவுத் திட்டங்கள் இன்று முறையாகச் செயற்படுத்தப்படவில்லை.

பிள்ளைகளுக்குச் சரியான கல்வியுடன், அறநெறிப் பண்புகளையும் சமச்சீரான உணவையும் வழங்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தேர்தல் காலத்தில் ஒரு கிலோ நெல்லுக்கு 150 ரூபா தருவோம் என்று வாக்குறுதி அளித்தவர்கள், இன்று 120 ரூபாவைக் கூட வழங்கவில்லை.

80 ரூபாவுக்கு நெல்லை விற்பனை செய்வதால் விவசாயிகள் தமது உற்பத்திச் செலவைக் கூட ஈடுகட்ட முடியாமல் தவிக்கின்றனர். இதற்கான தீர்வை வழங்க இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும் எனப் பொறுப்பற்ற விதத்தில் அமைச்சர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் வறுமை அதிகரித்துள்ள சூழலில், அரசு நிலக்கரி இறக்குமதியிலும் முறைகேடுகளைச் செய்கின்றது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட 10 கப்பல் நிலக்கரியும் தரமற்றவை. இதனால் 900 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போயுள்ளது. இதனை அமைச்சர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆளும் தரப்பு அமைச்சர்கள் மகாசங்கத்தினரை அவமதிக்கும் வகையில் செயற்படுகின்றனர். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கும் அரசமைப்புச் சட்டம் குறித்துப் போதிய தெளிவில்லாத ஒரு குழுவினர் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.” – என்றார்.









# இலங்கையின் உற்ற நண்பனை இழந்தோம்!

## ஈரான் முன்னாள் ஜனாதிபதி மறைவுக்கு நாமல் கவலை



ஈரான் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநெஜாட் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார் எனக் கூறப்படும் செய்தி கேட்டு தான் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது 'எக்ஸ்' சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் முன்னாள் ஜனாதிபதி அஹ்மதிநெஜாட் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை நாமல் ராஜபக்ஷ இதன்போது நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அஹ்மதிநெஜாட், நாட்டின் முக்கிய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தோள் கொடுத்தமையை நாமல் சுட்டிக்காட்டியுள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையின் மின்சக்தி மற்றும் விவசாயத் துறைக்கு வலுசேர்க்கும் உமா ஓயா பல்நோக்கு மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்குவதில் அஹ்மதிநெஜாட் முக்கிய பங்கு வகித்தார் என்று நாமல் தெரிவித்துள்ளார்.

"ஈரான் எப்போதும் இலங்கையின் உண்மையான மற்றும் நெருக்கமான நண்பனாக இருந்து வருகின்றது" என்று சுட்டிக்காட்டியுள்ள நாமல் ராஜபக்ஷ, இந்தத் துயரமான சம்பவத்தில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் அஹ்மதிநெஜாட்டின் குடும்பத்தினருக்கும் ஈரான் மக்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் முன்னாள் ஜனாதிபதி உயிரிழந்த செய்தி சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களிடமிருந்து வரும் முதல் இரங்கல் செய்தி இதுவாகும்.

# போதைப்பொருள் கும்பல்களை நிலைகுலையச் செய்த பொலிஸ்

## ஒரே நாளில் 1,286 பேர் கைது

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 1,286 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, 1,290 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 2 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 428 கிராம் ஹெரோயின், 702 கிராம் ஐஸ், 5 கிராம் 785 மில்லிகிராம் கொக்கெய்ன், ஒரு கிலோகிராம் 450 கிராம் கஞ்சா, 2,129 கஞ்சா செடிகள், ஒரு கிராம் குஷ் ரக போதைப்பொருள், 400 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 278 போதை மாத்திரைகள், 849 கிராம் 440 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 600 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கொழும்பில் வழமைக்குத் திரும்பிய எரிபொருள் விநியோக நடவடிக்கை

## நீண்ட வரிசைகள் மறைந்தன




கொழும்பு நகரின் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நேற்று இரவு முதல் முழுமையாக வழமைக்குத் திரும்பியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக எரிபொருள் நிலையங்களில் காணப்பட்ட நீண்ட வாகன வரிசைகள் தற்போது மறைந்துள்ளன என்று கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பின் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் தடையின்றி எரிபொருளைப் பெற்று வருகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. ஆகியன போதுமான அளவு கையிருப்புகளை சந்தைக்குவிடுத்துள்ளதால்தட்டுப்பாடுநீங்கியுள்ளது.

தேவையற்ற முறையில் எரிபொருளைச் சேமிக்க முயற்சித்த நபர்கள் மற்றும் சில ஓட்டோ சாரதிகளினால் ஏற்பட்ட குழப்ப நிலைமையை அதிகாரிகள் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

அரசின் முறையான விநியோக முகாமைத்துவம் காரணமாக கொழும்பு நகரின் எரிபொருள் விநியோகம் ஸ்திரமடைந்துள்ளது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மற்றும் வெள்ளவத்தை உள்ளிட்ட பகுதிகளில் சமையல் எரிவாயு விநியோகமும் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதிகாலை வேளைகளில் முன்பதிவு செய்யும் நுகர்வோருக்கு அன்றைய தினமே சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வீடுகளுக்கே விநியோகிக்கப்படுகின்றன.

விநியோகத்தில் எவ்வித பாரிய தாமதங்களும் இதுவரை பதிவாகவில்லை என வெள்ளவத்தை பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் கொழும்பில் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகக் கட்டமைப்பு தற்போது வலுவான நிலையை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் 'வீர வனிதையர்' விருது விழா

## பிரதம அதிதியாக அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பங்கேற்பு




46 ஆண்டுகால கலைப் பாரம்பரியத்தைக் கொண்ட புதிய அலை கலை வட்டம், அதன் மகளிர் அணியின் ஏற்பாட்டில் இரண்டாவது ஆண்டாக வழங்கும் "வீர வனிதையர்" விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில், கொழும்பு – 11, செட்டியார் தெருவில் அமைந்துள்ள கல்யாண முருகன் மண்டபத்தில் இவ்விழா மிக விமர்சையாக நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்துகொள்கின்றார்.

நிகழ்வுக்கு முன்னிலை வகிக்கின்றார் பிரபல தொழில் அதிபர் பி.எஸ்.செல்வரட்ணம்.

சிறப்பு அதிதியாக தமிழகம் புதுக்கோட்டை தமிழ் சங்கத் தலைவர் கவிஞர் தங்கம் மூர்த்தியும், கௌரவ அதிதிகளாக மேலும் பலரும் பங்கேற்கின்றனர்.

கடந்த ஆண்டு நடை பெற்ற மகளிர் தின விழாவில் வழங்கப்பட்டது போல் இவ்வாண்டும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணங்களும், துப்புரவுத் தொழிலாளருக்கு சாறி மற்றும் அத்தியாவசியப்பொருள்களும் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வின் பிரதான அம்சமாக கலை, இலக்கியம், ஊடகம்,சமூக மற்றும் ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டுவரும் பெண்கள் 20 பேருக்கு வீர வனிதை விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

பல்வேறு கலைக் கதம்ப நிகழ்ச்சிகளும். ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மகளிர் அணி நிர்வாகம் அறிவிக்கின்றது.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் ஊடகவியலாளர்கள் கொலைகுறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு' வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

நல்ல விடயம். இப்போது காலம் கடந்து வலியுறுத்தும் ஹக்கீம் அவர்கள் 2000 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா தொடக்கம் 2024, ஜனாதிபதி ரணில் வரை (இடையில் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரி)ஏறக்குறைய நான்கு ஜனாதிபதிகளுடன் ஒட்டி உறவாடி அமைச்சர் பதவிகளையும் பெற்றவர். அவர்கள் காலத்தில்தானே 40க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன, ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர்.

அப்போது ஏன் ஜனாதிபதி ஆணைக் குழு அமைக்குமாறு கோர உங்களால் முடியவில்லை..?

ஏன் 2015 தொடக்கம் 2019, வரை நல்லாட்சி அரசில் நீங்களும் அல்லவா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து முட்டுக்கொடுத்தீர்கள். அப்போது இந்த எண்ணம், சிந்தனை தோன்றவில்லையா?

நீதி அமைச்சராயும் 2012 இல் இருந்தீர்கள். அந்தக் காலத்தில் கோமாவிலா இருந்தீர்கள்? யாரைப் பேய்க் காட்டுகிறீர்கள்?

இலங்கை அரசின் விசாரணைகள், ஆணைக் குழுக்களில் நம்பிக்கை இல்லை என்பதால்தான் இப்போது தமிழ் ஊடகவியலாளர்களும், தமிழ் தேசிய கட்சிகளும், பொது அமைப்புக்களும் சர்வதேச விசாரணையைக் கோரி செயல்படுகின்றனர். அதனை தடுக்கவா நீங்கள் இப்போது ஊடகவியலாளர்கள் படுகொலைகளுக்கு ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைக்கக் கோரி இனப்படுகொலையாளர்களை காப்பாற்றப் பார்கிறீர்கள் என்ற சந்தேகம் நானும் ஓர் ஊடகத்துறை சார்ந்தவன் என்ற வகையில் எனக்கு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நீதியை மழுங்கடித்து இலங்கை அரசின் நீதிக்கு நம்பிக்கை ஊட்டும் கருத்தாகவே நான் இதனை பார்க்கிறேன்." – என்று பா.அரியநேத்திரன் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

அவரின் கேள்விகளில் சில நியாயங்கள் உண்டு.

இவற்றை வாசித்த போது எனக்கு பழைய சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

2015 இல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவியேற்ற பின்னர் அமைச்சரவைப் பேச்சாளராக விளங்கிய டாக்டர் ராஜித சேனாரத்னவிடம் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், அந்தச் சமயத்தில் என் பெயரைக் குறிப்பிட்டு சில விடயங்களை கூறியிருந்தார்.

"பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். சிலர் காணாமல் போய் உள்ளனர். அவர்களின் தரப்புக் கருத்துக்களை அவர்களிடமிருந்து பெற முடியாது. ஆனால் வெள்ளை வானில் கடத்தப்பட்டு, நெருக்கடிகளை எதிர் கொண்ட ஊடகவியலாளர் வித்தியாதரன் இன்னும் உயிருடன் இருக்கின்றார். தமக்கு ஏற்பட்ட நெருக்கடிகளையும் அதன் விவரங்களையும் தரக்கூடியவராக அவர் உள்ளார். ஆகவே ஊடகவியலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடக்கும். முதலாவது ஆளாக வித்தியாதரனின் வாக்குமூலத்தைப் பெற்று, அதிலிருந்து விசாரணைகளைத் தொடங்குவோம்." – என்ற சாரப்பட ராஜித சேனரத்தின பதிலளித்திருந்தார்.

இப்படி அவர் கூறி பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டன. ஆனால் எனக்கு நேர்ந்த கதி குறித்து எந்த புலனாய்வாளர்களும் விசாரணையாளர்களும் என்னிடம் வரவுமில்லை, என்னிடம் ஒரு வாக்குமூலம் கூடப் பெறவுமில்லை.

இந்தச் சூழ்நிலையில் நல்லாட்சி அரசின் இறுதிக் கட்டத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்திருந்தார். ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அந்த நிகழ்வில் மேடையில் அவரது பேச்சை மொழிபெயர்க்கும் பொறுப்போடு தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

அந்தச் சந்திப்பில் பங்கு பற்றிய நான் மேடையில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுக் கேள்வி எழுப்பினேன்.

"ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து முழுமையாக விசாரணை நடத்துவோம், உண்மைகளைக் கண்டறிவோம், நீதியை நிலை நாட்டுவோம் என்று உங்கள் அரசின் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்தினர் குறிப்பிட்டு இருந்தார். வெள்ளை வானில் கடத்தப்பட்ட பின்னரும் உயிருடம் மீண்ட வித்தியாதரனிலிருந்து விசாரணைகளைத் தொடங்குவோம் என்று அவர் கூறி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன ஆனால் ஒரு வாக்குமூலம் பெறக் கூட தங்களின் பொலிஸார் என்னிடம் வரவில்லையே?" – என்ற சாரப்பட நான் கேள்வி எழுப்பினேன்.

"பாதிக்கப்பட்ட லஸந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட போன்ற சிங்கள ஊடகவியலாளர்கள் விடயத்தில் சிறுதளவேனும் விசாரணைகள் முன் நகர்ந்து இருக்கின்றன. ஆனால் பெருமளவில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத்தில் எந்த முன்நகர்வும் இடம் பெறவில்லையே... இதிலும் தமிழ் – சிங்கள வேறுபாடு பார்க்கிறீர்களா?" – என்று நான் கேட்டேன்.

அத்தகைய ஒரு கேள்வியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்க வெளியில் எதிர்பார்க்கவில்லை. அவரின் முகத்தில் ஈயாடவில்லை. ஆயினும் நிலைமையை சமாளித்து, வழமையான தமது அரசியல் அதிகப் பிரசங்கித்தனத்தை இதிலும் காட்டினார்.

"முழுமையாக புலன்விசாரணை செய்வதுதான் எங்கள் அரசின் இலக்கு. ஆனால் தமிழ் புலன்விசாரணையாளர்கள் எங்கள் மத்தியில் இல்லை அல்லது குறைவு. அதனால் அந்த விடயம் தாமதம் ஆகிறது" என்று கயிறு விட்டார் அவர்.

அன்றைய நிலையில் அப்படி அவரிடம் பல ஊடகவியலாளர்கள் மத்தியிக் நேரடியாகக் கேட்க முடிந்ததே என்று எங்களுக்குள் நாங்களே சமாதானம் கூறி அமைதியடைவதைத் தவிர அங்கு வேறு வழி இருக்கவில்லை.

\+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் மாலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் முதலாம் ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் ஆற்றிய உரை குறித்து நேற்று என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அது தொடர்பில் சுமந்திரன் ஒரு விளக்கத்தை நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி பதவிக்கு அநுரகுமார திஸநாயக்க வந்ததும், தம்மை நீதி அமைச்சர் பதவியை ஏற்கும்படி கோரினார் என்று சுமந்திரன் அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார் என நான் குறிப்பிட்டு இருந்தேன்.

"அவர் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் அந்தப் பதவிக்கு என்னை அழைத்தார் என்று நான் குறிப்பிடவில்லை. தேர்தல் வாக்களிப்புக்கு முன்னரே அவர் அதனை என்னிடம் தெரிவித்திருந்தார். நீதி, அரசமைப்பு விவகார உருவாக்கம், லஞ்ச, ஊழல் விசாரணை விவகாரம் ஆகிய விடயங்கள் அடங்கியதாக நீதி அமைச்சை எனக்கு வழங்குவார் என்றும், அதில் தமது தலையீடின்றி சுயாதீனமாக நான் விடயங்களை கொண்டு செல்லலாம் என்றும் ஒரு யோசனையை தேர்தலுக்கு முன்னரே அவர் எனக்கு தெரிவித்தார். அதனைத்தான் நீதி அமைச்சை எனக்கு வழங்க அநுரகுமார திஸநாயக்க முன் வந்தார் என்று அந்த உரையில் குறிப்பிட்டு இருந்தேன்." – என சுமந்திரன் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

நேற்று முன்தினம் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடந்த நிகழ்வில் அவரது உரையை செவி மடுத்த ஏனையோரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்கு பின்னர் அந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக சுமந்திரன் குறிப்பிடவில்லை என்பதை உறுதிப்படுத்தினர்.

சுமந்திரனின் அந்த உரையின் சுருக்கத்தை பதிவு செய்த போது அதில் இந்த அர்த்தத்தை நான் சற்று தவறாக தந்து விட்டேன் என்று தோன்றுகின்றது. வாசகர்கள் அந்தச் செய்தியை இந்த திருத்தத்தோடு உள்வாங்கிக் கொள்வார்களாக!

---

# ட்ரம்பின் செயலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாகம், பிற நாடுகளின் ஆட்சி அதிகாரத்தை வலுக்கட்டாயமாக மாற்ற எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.


ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் இராணுவத் தாக்குதல்கள் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ்ரேலுடன் இணைந்து ஈரானின் தற்போதைய தலைமையை அகற்ற முயற்சிக்கின்றார். ஒரு நாட்டின் அரசை அகற்றுவதாக இருந்தால், அதற்குப் பயன்படுத்தப்படும் இத்தகைய வன்முறை வழிமுறைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுக்கு முற்றிலும் முரணானது என சுவிற்சர்லாந்தும் நோர்வேயும் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளன." – என்றார்.

இந்த விவகாரம் மிகவும் பாரதூரமானது என்று குறிப்பிட்ட அவர், இவ்வாறான உலக அரசியல் போக்குகள் இலங்கையைப் போன்ற சிறிய நாடுகளுக்குச் சாதகமானவை அல்ல என்றும் எச்சரித்தார்.

"அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உலகம் முழுவதும் தனது விருப்பப்படி இயங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றார். ஆனால், இது போன்ற ஆழமான சர்வதேசப் பிரச்சினைகள் மற்றும் அதிகாரப் போட்டிகள் சிறிய நாடுகளின் ஸ்திரத்தன்மைக்குப் பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும்." – என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.


GOLDEN VOICE
OF NORTH
குரல்
தேர்வு
விரைவில்...!
a one
MEDIA NETWORK
MURASU
digital
tamil one

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அமெரிக்க அடாவடி!

அமெரிக்காவும் இஸ்ரேலும் சேர்ந்து ஈரான் மீது தொடுத்த தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையும், அதனூடாக வெளிப்படும் கருத்துப் பிரதிபலிப்பும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கையோடு தொடர்புபட்ட மக்கள் மத்தியிலும் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

அநீதி இழைப்பது வல்லரசு என்பதற்காக - வல்லாதிக்க சக்தி என்பதற்காக - அதற்குப் பயந்து தன்னை நடுநிலைப் போல காட்டி நீதிக்கு எதிரான திசையில் கொழும்பு ஆட்சித் தலைமை நிலைப்பாடு எடுத்து உள்ளது எனப் பக்கச் சார்பற்ற நோக்கர்கள் கூறுகிறார்கள்.

ஈரானின் பாதிக்கப்பட்ட தரப்பு முஸ்லிம்கள் என்பதால், இலங்கையில் சிறுபான்மையினராக விளங்கும் முஸ்லிம்களும் அவர்களோடு அதே சிறுபான்மை நிலையில் வரிசை படுத்தப்பட்டிருக்கும் தமிழர்கள், மலையக மக்கள் போன்றவர்களும் இது விடயத்தில் அமெரிக்க வல்லாதிக்கத்திற்கு எதிரான சீற்றக் கருத்து நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

இந்த விவகாரத்தை ஒட்டி இலங்கையின் முதிர்ந்த அரசியல்வாதிகளில் ஒருவரும், மூத்த அரசியல் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் ஓரளவுக்கு உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

பிற நாடுகளின் ஆட்சி அதிகாரத்தை வலுக்கட்டாயமாக மாற்ற ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் முன்னெடுக்கும் தாக்குதல்கள் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

''ஜனாதிபதி ட்ரம்ப் இஸ்ரேலுடன் இணைந்து ஈரானின் தலைமையை அகற்ற முயற்சிக்கிறார். ஒரு அரசாங்கத்தை அகற்றுவதாக இருந்தால் இந்த வன்முறை வழிமுறையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது, சர்வதேசச் சட்டங்கள் மற்றும் மரபுகளுக்கு முரணானது என சுவிட்சர்லாந்தும் நோர்வேயும்சுட்டிக்காட்டியுள்ளன.

''இந்த விவகாரம் மிகவும் பாரதூரமானது. இவ்வாறான உலக அரசியல் போக்குகள் இலங்கைக்குச் சாதகமானவை அல்ல'' - என்றும் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்தார்.

''ஈரானின் எண்ணெய் உற்பத்தி நின்றால் மட்டும் இலங்கையில் பெரிய தட்டுப்பாடு ஏற்படாது. ஏனெனில் ஏனைய நாடுகள் அதிக எண்ணெயை உற்பத்தி செய்கின்றன. ஆனால், ஈரான் தனது கடல் எல்லை வழியாக வரும் ஏனைய நாடுகளின் எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திப் போக்குவரத்தை முடக்கினால், அது பெரும் நெருக்கடியை உருவாக்கும். எனினும், தற்போது வரை அவ் வாறு நடக்கவில்லை.'' - என்றார் ரணில்.

உலகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. 'வல்லவன் வகுத்ததே நீதி' என்ற பொதுவான அதர்மத்தில்தான் உலகத்தில் நீதி பரிபாலிக்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் பல அதர்மங்களை - அநீதிகளை - உலகம் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய கட்டாயமும் தொடர்கின்றது. அதன் ஓர் அங்கம்தான் இப்போது மத்திய கிழக்கில் கட்டவிழ்கின்றது எனலாம்.

# அரச ஊழியர்களின் வீட்டுக்கடன் எல்லை 50 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது




அரச ஊழியர்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த வீட்டு வசதி மற்றும் சொத்துக்கடன்களுக்கான அதிகபட்ச எல்லை 50 லட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறை 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய நேற்று முன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவினால் வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதார சூழல் மற்றும் கட்டுமானச் செலவுகளைக் கருத்தில் கொண்டும் அரச ஊழியர்களின் நலன் கருதியும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## ஒரே குடையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை ஒரு பொதுவான சட்டக் கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய பயணத்தை வேகப்படுத்துவதே இந்தச் சந்திப்பின் பிரதான நோக்கமாகும் என்று தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி க.ச.இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள துவாரகா மண்டபத்தில் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைச் சிதையாமல் பாதுகாப்பதற்கும் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் ஒருமித்த குரலில் கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் இவ்வாறானதொரு மேடை அவசியமாகின்றது.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்றக் கட்சிகள் யாவும் ஒரு சில முக்கியமான விடயங்களில் ஒருமித்த கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்தச் சந்திப்பானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மூடிய அறை கூட்டமாக அமைந்திருந்ததுடன் அங்கு பகிரப்பட்ட கருத்துக்கள் அந்தந்த அரசியல் கட்சிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகக் கருதப்படும். வரும் காலங்களில் மிக விரைவில் மீண்டும் கூடி பிரதானமான பல முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளோம்.” – என்றார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது கருத்தைப் பகிர்கையில்,

“இது ஒரு வெற்றியென்பதை தாண்டி ஒரு தொடக்கம் மாத்திரமே. இனப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுப்பதற்குத் தமிழ்க் கட்சிகள் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் அதன் நுணுக்கமான விவரங்கள் குறித்து இனிவரும் சந்திப்புகளில் விரிவாக ஆராயப்பட வேண்டும்.” – என்றார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் இக்கூட்டம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்றமற்றும்மாகாணசபைத் தேர்தல்களில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. நீண்டகாலமாக நிலவும் இனப் பிரச்சினைக்கு அரசியல் சாசனம் ஊடாகத் தீர்வு காண்பதற்கான தொடர்ச்சியான நகர்வாக இது அமைவதோடு தமிழ்க் கட்சிகள் யாவும் ஒரே சட்டக் குடையின் கீழ் ஒன்றிணைந்திருப்பது ஒரு பாரிய வெற்றி.” – என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூறுகையில்,

“இச்சந்திப்பு மிகவும் சுமுகமாக நடைபெற்றது. சந்திப்பில்எடுக்கப்பட்டதீர்மானங்கள் மற்றும் அடுத்தகட்ட செயற்றிட்டங்கள் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்புகளைத் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையே மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.” – என்றார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

“தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை இனி வரும் காலங்களில் தமிழ் கட்சிகளை இணைக்கும் பாலமாகச் செயற்பட வேண்டும். தனித்தனியாகப் பிரிந்து நின்று செயற்பட்ட நிலையை மாற்றி மக்கள் என்ன விரும்புகின்றார்கள் என்பதை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் ஒரே குரலில் சொல்ல வேண்டிய காலம் கனிந்துள்ளது. இக்கூட்டு முயற்சி தற்போதைய அரசுக்கு ஒரு பலமான செய்தியைச் சொல்லும்.” – என்றார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட தரப்பினரும் கலந்துகொண்டனர்.

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர்களான சட்டத்தரணி க.ச.இரத்தினவேல் ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரன், பேராசிரியர் அ.சர்வேஸ்வரன், சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, சட்டத்தரணி வ.ச.நிரைஞ்சன், சட்டத்தரணி ஞா.ரனித்தா மற்றும் சட்டத்தரணி ம.யூட் தினேஷ் உள்ளிட்ட முக்கிய சட்ட வல்லுநர்கள் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

இந்தச் சந்திப்பானது நீண்டகாலமாகத் தனித்தனியாகப் பயணித்த தமிழ் அரசியல் சக்திகளை ஒரு பொதுவான இலக்கின் கீழ் கொண்டு வருவதற்கான முதல் படியாக அமைகின்றது. தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் நடுநிலையான வழிகாட்டலில் எட்டப்பட்டுள்ள இந்த ஆரம்பகட்ட இணக்கப்பாடானது வரும் காலங்களில் ஒரு பலமான அரசியல் அழுத்தக் குழுவாக உருவெடுக்க வழிவகுக்கும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பான விபரமான ஆவணங்களைத் தயாரித்து அடுத்தகட்டச் சந்திப்புகளில் இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இங்கு எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போர் பதற்றம் காரணமாக எரிபொருள் விநியோகம் தடைப்படும் என மக்கள் கருதுவது தவறு என அமைச்சர் சுட்டிக்காட்டினார். ”இலங்கைக்கு எரிபொருளை ஏற்றி வரும் கப்பல்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் மோதல் வலயங்கள் ஊடாகப் பயணிக்கவில்லை. அவை வேறு பாதுகாப்பான கடல் வழிகளிலேயே வருகின்றன. எனவே, விநியோகச் சங்கிலியில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது” என்று அவர் விளக்கமளித்தார்.

### தேவையான அளவு கையிருப்பு

நாட்டில் தற்போதைய தேவைக்குத் தேவையான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற தேவையற்ற அச்சத்தில் மக்கள் எரிபொருளைச் சேகரித்து வைக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

### பொதுமக்களுக்கு வேண்டுகோள்

எரிபொருள் நிலையங்களில் மக்கள் முண்டியடிப்பதையும், நீண்ட வரிசைகளில் காத்திருப்பதையும் தவிர்க்குமாறு அரசு கோரியுள்ளது. வீண் வதந்திகளை நம்பிப் பதற்றமடைய வேண்டாம் எனவும், விநியோக நடவடிக்கைகள் வழமை போல் சீராக முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதன் போது உறுதியளித்தார்.

மத்திய கிழக்கு போர் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மாற்றமடைந்தாலும், இலங்கைக்குத் தடையின்றி எரிபொருளை விநியோகிக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு எடுத்துள்ளது என்றும் அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.





# வறுமையால் எந்தச் சிறுவனும் கல்வியை இழக்கவே கூடாது!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

சிறுவர்களின் பாதுகாப்பான எதிர்காலம் மற்றும் ஒளிமயமான வாழ்வை உருவாக்கிக் கொடுப்பது எம் அனைவரதும் தலையாய பொறுப்பும் கடமையுமாகும் எனவும், இக்கருத்தரங்கின் ஊடாக முன்வைக்கப்படும் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண நிர்வாகம் தனது முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'சிறுவர் நலன் மற்றும் பாதுகாப்பு' எனும் தொனிப் பொருளிலான விசேட கருத்தரங்கு – 2026 நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் இலங்கை நிதி ஆணைக்குழுவின் தவிசாளர் சுமித் அபேசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் விசேட உரையாற்றிய ஆளுநர்,

"வடக்கு மாகாணம் மிக நீண்ட காலமாகப் போரின் தாக்கங்களை எதிர்கொண்டதொரு மாகாணமாகும். எனவே, இங்குள்ள சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பல சிறுவர்கள் தமது தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்த நிலையில் வாழ்கின்றனர். ஏனைய சிறுவர்களை விட இவர்களுக்கான தேவைப்பாடுகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மிகவும் விசேடமானவை. இன்றும் பல சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர். இல்லங்களில் இல்லாத போதிலும், சமூகத்தில் பல சிறுவர்களுக்கு எமது உதவிகள் தேவைப்படுகின்றன. வறுமை காரணமாக எந்தவொரு சிறுவனும் தனது கல்வியை இழந்துவிடக் கூடாது என்பதில் நாம் ஒவ்வொருவரும் அதீத அக்கறை கொள்ள வேண்டும்." – என்று வலியுறுத்தினார்.

மேலும், சிறுவர்களை இலக்கு வைத்து சமூகப் பிறழ்வுகள் அதிகரித்து வரும் தற்காலச் சூழலில், அது தொடர்பில் அதிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், எமது மாகாணச் சிறுவர்களின் தனித்துவமான மற்றும் பொதுவான பிரச்சினைகளைச் சரியான முறையில் இனங்கண்டு, அவற்றை இயலுமானவரை தீர்த்து வைப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி▼














# வறுமையால் எந்தச் சிறுவனும் கல்வியை இழக்கவே கூடாது!

**தொடர்ச்சி▲**

இந்த விசேட கருத்தரங்கில், சட்டத்துடன் தொடர்புடைய மற்றும் முரண்படும் சிறுவர்கள், சிறுவர்களின் மன ஆரோக்கியம் மற்றும் உளவியல் சமூக ஆதரவு, கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு, அத்துடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் பாதுகாப்பான பயன்பாடு ஆகிய நான்கு பிரதான தொனிப்பொருள்களின் கீழ் விசேட தொழில்நுட்ப அமர்வுகள் மற்றும் துறைசார் நிபுணர்களின் குழு விவாதங்கள் இடம்பெற்றன.

முன்னதாக விருந்தினர்களால் சிறுவர்களின் கை வண்ணங்கள் கண்காட்சியும் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் பல் கலைக் கழகம் மற்றும் கல்வியற் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சிறுவர் இல்ல சிறுவர்களுக்கான பதக்கங்களும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், இலங்கை நிதி ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.எம்.யு.டி.பி.தென்னக்கோன், மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி ச.லதுமீரா, சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதியும் நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினருமான திருமதி சிறிநிதி நந்தசேகரன், ஆசியா அறக்கட்டளையின் பிரதிநிதி திருமதி நிலுகா விக்ரமசிங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன், ஆசியா அறக்கட்டளையின் ‘ஆளுகையை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின்’ பூரண ஆதரவுடன் இந்த விசேட கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# ஈரானின் உயர்தலைவரின் மரணத்தை ஒட்டிய இலங்கை அரசின் அறிக்கைக்குக் கண்டனம்

## நழுவல் போக்கை வெளிக்காட்டுவதாக ரவூப் ஹக்கீம் விசனம்



ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்திய மிகவும் கொடூரமான, ஒருதலைப்பட்சமான தாக்குதல் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:ஃ

இந்தத் தாக்குதலின் விளைவாக ஈரானின் உயர் தலைவர் ஆயதுல்லாஹ் அலி கொமெய்னி மற்றும் உயர்மட்ட அரச பாதுகாப்பு அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதிர்ச்சியூட்டும் வகையில்,சர்வதேச சட்டத்தை முற்றாக மீறி, அமெரிக்கா, இஸ்ரேல் அகியவற்றால் தேவையற்ற விதத்திலும், பொறுப்பற்ற விதத்திலும் மேற்கொள்ளப்பட்டதாக விவரிக்கப்படும் இந்த தாக்குதலில் தங்கள் பெருமதிப்பிற்குரிய உயர் தலைவரின் இழப்புக்கு மத்தியில் ஈரான் மக்கள் துயரத்தில் ஆழ்திருக்கும் வேளையில், அவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த கவலையையும், உளப்பூர்வமான அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதன் மூலம் பிராந்தியத்தில் பதற்றத்தைக் குறைக்க ஈரான் தெளிவாக முயன்று வந்திருக்கிறது.

மேலும், அமெரிக்க – இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்கள் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது பாதிக்கப்பட்ட(ஈரான்) அரசின் பதிலடி குறித்து இலங்கை அரசாங்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிருப்தி தரும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது, அதில், ஈரான் அல்லது அதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பாரிய இழப்புகள் பற்றிய எந்தவிதமான குறிப்பையும் தவிர்த்துக்கொண்டுள்ளது. ஈரான், இலங்கையுடன் வரலாற்று ரீதியாக நட்புறவைப் பேணி வரும் ஒரு நாடு என்பதை மறந்துவிடக் கூடாது.

இலங்கை அரசாங்கம் கையாண்டிருக்கும் சொல்லாட்சி, ஈரானின் உயர் தலைவரின் மரணத்தைச் சூழ்ந்திருந்த மிலேச்சத்தனத்தை அங்கீகரிப்பதாகவே தோன்றுகிறது. இந்த இழி செயலைக் கண்டிப்பதற்கும், இறையாண்மை கொண்ட ஒரு தேசத்திற்கு எதிரான அவர்களின் "வெற்றிகரமான" இராணுவத் தாக்குதல்களைப் பற்றிப் பீற்றிக் கொள்ளும் ஆக்கிரமிப்பாளர்களினால் அவர் கொல்லப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிப்பதற்குப் பதிலாக, அணிசேரா கொள்கை மற்றும் நடுநிலைமையைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக் கொண்டே, இலங்கை அரசாங்கம் ஈரான் மீதான அமெரிக்க – இஸ்ரேலிய நிலைப்பாட்டிலும், பல சந்தர்ப்பகளில் காசா மீதான செயற்பாட்டிலும் அதன் தொடர்ச்சியான நழுவல் போக்கை வெளிக்காட்டியுள்ளது கவலையளிக்கிறது.

காசா மீதான இஸ்ரேலியப் போர் மற்றும் ஈரானின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை பாதிக்கும் விஷயங்கள் குறித்து பதவியேற்றதிலிருந்து இலங்கை அரசாங்கம் வெளியிட்டுவரும் அதிகாரப்பூர்வ கருத்துக்கள் கண்டிக்கத்தக்கவை.

அறிவுபூர்வமாகவும், தார்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உற்று நோக்கினால், அரசாங்கங்களும்,வெளிவிவகார அமைச்சுகளும், இந்த அளவுக்கு மட்டரகமாக இதற்கு முன்னர் நடந்து கொள்ளவில்லை. மிகப்பெரிய ஆக்கிரமிப்பு நாடான இஸ்ரேலின் சுய பாதுகாப்புக்காக என்ற போலியான கூற்றுக்களை இன்னும் தங்கள் தனிப்பட்ட சொந்த விருப்பு,வெறுப்புக்களை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சில மேற்கத்திய நாடுகளின் நிலைப்பாடுகளுடன் தற்போதைய இலங்கை ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும் பெரிதும் ஒத்துப்போவதாகவே தென்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதத்தில்,அமெரிக்க – இஸ்ரேலிய இராணுவ ஆக்கிரமிப்பின் அட்டூழியத்தைப் பற்றி அறவே குறிப்பிடாமல், பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டின் மீது பதற்றத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் சுமையை ஒரு விவேகமான அரசாங்கம் எவ்வாறு சுமத்த முடியும்?


ஒரு பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சியினர் என்ற அடிப்படையில், அமெரிக்க – இஸ்ரேலிய படையினரின் அத்துமீறிய ஆக்கிரமிப்பையும் ஈரானின் உயர் தலைவரின் வெறுக்கத்தக்க படுகொலையையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஈரானின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை மதிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். உலகளாவிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நீண்டகால பிராந்திய மோதலின் படுகுழியில் பிராந்தியத்தைத் தள்ளிவிடக் கூடிய ஒரு மோதலைத் தணிப்பதிலும், தவிர்ப்பதிலும்தான் பாதுகாப்பான பிராந்தியத்தின் நன்மையும், நலனும் தங்கியுள்ளன.

ஈரானுக்கும், பிராந்தியத்திற்கும் இடையிலான தற்போதைய பதற்றநிலை எங்கள் கவனத்தை ஈர்த்துள்ளது . அமெரிக்க இராணுவத் தளங்களை வைத்துக் கொண்டிருக்கும் வளைகுடா நாடுகள், அமெரிக்க இராணுவ இருப்புக்கு எதிராக ஈரானிய பழிவாங்கலின் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய அளவுக்கு நிலைமை உருவாகுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இதுபோன்ற சூழ்நிலை பிராந்தியத்தை குழப்பத்தில் வைத்திருப்பது பெரிதும் வருந்தத்தக்கது.

பரந்த பிராந்திய மோதல் மற்றும் உலகளாவிய உறுதியற்ற தன்மை குறித்த அச்சம் அதிகரித்து வருவதால், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார், பஹ்ரைன், குவைத் மற்றும் ஜோர்டான், அவற்றில் வசிக்கும் மக்கள் மற்றும் பரந்த பிராந்தியத்துடன் நாங்கள் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த விரும்புகிறோம். ஆக்கபூர்வமான ராஜதந்திர நடவடிக்கைளில் ஈடுபட அனைத்து தரப்பினரையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அமைதியான அணு ஆய்வு மற்றும் அதன் பயன்பாட்டிற்கான நாடுகளின் உரிமையைப் பாதுகாப்பதே எங்கள் நம்பிக்கையும் பிரார்த்தனையும் ஆகும். இது, பரஸ்பர மரியாதை, ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஓர் அமைதி நிலவும் மத்திய கிழக்கை மிளிரச் செய்யும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது






# கடற்புலிகளின் பங்களிப்பை விவரிக்கின்ற நூல் இங்கிலாந்தின் வெம்பிளியில் வெளியீடு

(மன்னார் நிருபர்)

“கடலில் கரைந்து விட்ட காலங்களும் வரலாற்றில் தடம் பதித்து விட்ட நினைவுகளும்“ எனும் நூலின் பாகம் ஒன்று நேற்று முன்தினம் இங்கிலாந்தின் வெம்பிளி நகரில் வெளியிடப்பட்டது.

இந்நூல் கடலின் மடியின் குழுமத்தினரால் தமிழீழப் போராட்ட வரலாற்றில் கடற்புலிகளின் பங்களிப்பானது எத்தகையது என்பதை சந்ததியினருக்கு கடத்தும் நோக்கிலும், அவர்களது சாதனைகளை எடுத்து இயம்பும் நோக்கிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

கடற்புலிகளால் போராட்ட காலங்களில் எத்தகைய நடவடிக்கைகள் கடற்பரப்பில் நிகழ்த்தப்பட்டன, அவர்கள் இந்த இக்கட்டான சூழ் நிலைகளில் எவ்வாறான சூழ்நிலையில் மக்களுக்காகத் தங்களது செயல்பாடுகளையும் போராட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள் என்ற உண்மையான நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் ஓர்ஆவணப் புத்தகமாக ஆவணங்களை உள்ளடக்கியதாக இந் நூல் உள்ளது.



# 3 லட்சத்து 70 ஆயிரம் லீற்றர் பெற்றோல் குடாநாட்டில் இரண்டு நாள்களில் வழங்கல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 43 எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் இரு நாள்களில் 3 லட்சத்து 70 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக பெற் றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிக் கின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வழமையாக நாள் ஒன்றிற்கு ஒரு லட்சம் லீற்றர் பெற்றோலும் 90 ஆயிரம் லீற்றர் டீசலும் தேவைப்படுகின்றது.

இருந்தபோதும் தற்போது மத்திய கிழக்கில் மோதல் ஆரம்பித்தமை காரணமாக அதிக பெற்றோல் நுகர்வு காணப்படுகின்றது. இது அதிகரித்த பாவனை அல்ல. மாறாக அதகரித்த கொள்வனவாகவே காணப்படுகின்றது.

இந்த அதிகரித்த கொள்வனவு சேமிப்பை நோக்கமாக கொண்டு இடம் பெறுகின்றது. இருந்தபோதும் ஞாயிற்றுக்கிழமை குடாநாட்டிற்கு மட்டும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. திங்கள் கிழமை ஒரு லட்சத்து 95 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை களஞ்சியத்திற்கு எரிபொருள் எடுத்து வரப்படுகின்றது. விநியோகமும் தொடர்ச்சியாக இடம் பெறுகின்றது எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

# எரிபொருள் தடையின்றிக் கிடைக்கும் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. உறுதி தெரிவிப்பு

(கி.வசந்தன்)

எரிபொருள் தொடர்ந்து கிடைக்கும். மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக் கிடையிலான யுத்தம் காரணமாக இலங்கையில் மக்கள் தமது நேரங்களை வீண் விரயம் செய்து நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை கொள்வனவு செய்கிறார்கள்.

அரசாங்கம் மக்களுக்கு எரிபொருளை தடையின்றி வழங்க நடவடிக்கை




எடுத்துள்ளது. தற்போது 35 நாள்களுக்குத் தேவையான டீசல், 37 நாள்களுக்குத் தேவையான பெற்றோல், 30 நாள்களுக்குத் தேவையான சுப்பர் பெற்றோல், 72 நாள்களுக்குத் தேவையான சுப்பர் டீசல் என்பன கையிருப்பில் உள்ளன.

தொடர்ச்சியாக எரிபொருள் கப்பல்கள் வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே மக்கள் வீணாக பீதி அடைய வேண்டாம் என பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிடம் இருந்தே எரிபொருளை இலங்கை பெறுகின்து. அவை தொடர்ந்தும் கிடைக்கும்.

மக்கள் எரிபொருளை வீடுகளில் சேமித்து வைக்க வேண்டாம். அவை அனர்த்தங்களை ஏற்படுத்தும்.

அத்துடன் கான்களில் எரிபொருள் வழக்காக வேண்டாம் என நாம் எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளோம். எனவே வீண் அச்சம் தேவையில்லை. - எனத் தெரிவித்தார்.




# பேரிடர் மீட்புக்கு இந்தியா வழங்கிய அவசர கூடாரம் கச்சதீவில் பாவனை

## விருந்தினர் தங்குவதற்கு பயன்படுத்தப்பட்டதாம்

(என்.புவியரசன்)

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு இந்தியக் கடற்படையினர் வழங்கிய அவசர கூடாரம் கச்சதீவு உற்சவ காலத்தில் பயன்படுத்தப்படு கின்றது.

இலங்கையில் ஏற்பட்ட டித்வா புயல் பாதிப்பில் அகப்பட்ட மக்களிற்கு உதவுவதற்காக இந்திய கடற்படையின் கப்பல் இலங்கை வந்தபோது இந்தியக் கடற்படையினர் சில கூடாரங்களையும் வழங்கினர்.

அவ்வாறு வழங்கப்பட்ட கூடாரம் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் விருந்தினர் தங்குவதற்கு அமைத்த கொட்டகைகளில் காணப்பட்டது.







# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பஸ் அன்பளித்த லண்டன் தொழிலதிபர் சீவரத்தினம் முறேஷ்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் நீண்ட நாள் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானியக் கிளைத் தலைவரும் சமூகப் பணியாளரும் லண்டனைச் சேர்ந்த பிரபல தொழிலதிபருமான சீவரத்தினம் முறேஷ் பஸ் ஒன்றைக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அமரத்துவமடைந்த தனது தாயாரான திருமலர் அவர்களின் முதலாமாண்டு நினைவு நாளையொட்டி, அவரது ஞாபகார்த்தமாக மூன்று கோடி ரூபா பெறுமதியான பஸ்ஸை கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரியில் நடைபெற்ற எளிமையான வைபவத்தில் கல்லூரி அதிபர் திரு மதி ருஷிரா குலசிங்கத்திடம் தொழிலதிபர் முறேஷ் கையளித்துள்ளார்.




தற்போது இங்கிலாந்தில் வாழும் முறேஷ் தாய்நாட்டின் மீதும் தனது இதயத்திற்கு நெருக்கமான தாய்ப் பாடசாலையான கல்லூரியின் மீதும் அளவு கடந்த ஈடுபாடும் பற்றும் கொண்டு பல்வேறு விதமான பணிகளை முன்னெடுத்துவருகிறார். ஆரம்ப வகுப்புகளிலிருந்து சாதாரணதர வகுப்பு வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விகற்ற முறேஷ் பாடசாலைக் காலத்திலிருந்தே சமூகப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்தவராவார். புலம்பெயர்ந்து லண்டன் சென்று அங்கு கணக்கியல் துறையில் உயர்கல்வியைப் பெற்றுகொண்ட பின்னர் வணிகத்துறையில் ஈடுபாடுகாட்டி தனது அயராத உழைப்பாலும்விடாமுயற்சியாலும் முத்திரை பதித்த தொழிலதிபராகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். எளிமையும் பழகுவதற்கு இனிமையும் நட்புணர்வுமுடைய முறேஷ் தமிழ்ச் சமூகத்திற்காகப் பணியாற்றுவதில் ஆர்வமிக்கவர்.

யாழ்ப்பாணக் கல்லூரியை நேசிக்கும் முறேஷ் கல்லூரியின் உயர்ச்சியைக் கருத்தில்கொண்டு பல்வேறுபட்ட பணிகளைத் தனிப்பட்ட முறையிலும் பழைய மாணவர்களோடு இணைந்தும் முன்னெடுத்துவந்துள்ளார். கல்லூரிக்காக பாட்மின்ரன் மைதானம், வலைப்பந்தாட்ட மைதானம் என்பவற்றை அமைத்துக்கொடுத்தமையோடு ஹொக்கி, நெட்போல் விளையாட்டு அணிகளின் செயற்பாடுகளுக்குத் தொடர்ந்த அனுசரணையையும் வழங்கி வருகிறார். அத்தோடு பொருளாதார உதவி தேவைப்படும் நூறு மாணவர்களின் கல்விக்கான அனுசரணையை வழங்கி வருகின்றமையோடு மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் இணைப்பாட செயற்பாடுகளுக்கும் உதவிவருகிறார். முறேஷூக்கு யாழ்ப்பாணக் கல்லூரி பாடசாலை என்பதைத் தாண்டி அவருடைய வாழ்வின் அடையாளமாகவும் நினைவுகளின் தளமாகவும் உள்ளது. இன்று யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க பிரித்தானியக் கிளையின் தலைவராக விளங்கும் முறேஷ் அதன் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தி வலுப்படுத்துவதில் உழைத்த. வருகிறார்.

பாடசாலையைத் தாண்டி சமூகத்திலுள்ள உதவி தேவைப்படும் மக்களின் நலன் காப்பதிலும் இளைஞர் கழகங்கள், ஆலயங்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு உதவுவதிலும் முறேஷ் பங்களித்து வருகிறார். இலண்டனிலுள்ள சமூகசேவை அமைப்புகள் பலவற்றிற்கும் அவரது பங்களிப்பு வலுச்சேர்த்து வருகிறது. தன்னை முன்னிலைப் படுத்தாத அமைதியானவராக அவர் விளங்குவதால் அவரது பணிகள் பல அறியப்படாமலே உள்ளன.

இளம் தலைமுறையின் கல்வி, பாதுகாப்பு மற்றும் முழுமையான வளர்ச்சி சமூக முன்னேற்றத்தின் அடிப்படையாகும் என்று நம்பும் முறேஷ் அவர்களின் அமைதியான தாராள மனப்பான்மை தமிழர் சமூகத்திற்கும் உலகம் முழுவதுமுள்ள பல சமூகங்களுக்கும் ஒரு பெரும் உதாரணமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணக் கல்லூரி இங்கிலாந்து பழையமாணவர் சங்கம் மற்றும் பல சமூக அமைப்புகளுக்கு அவர் ஒரு வலுவுள்ள தூணாகத் திகழ்கிறார். முறேஷ் அவர்களுக்கு அவருடைய ஆதரவு மற்றும் மனிதநேயம் காரணமாக நன்றி தெரிவிக்கப்படுகிறது. அமைதியாகச் செயல்புரிந்து பலரின் வாழ்வில் ஒளி ஏற்றும் முறேஷ் போன்றவர்கள் சமூகத்தின் உண்மையான செல்வங்களாகத் திகழ்கிறார்கள். இவரைப் போன்று பலரும் பணியாற்ற வரவேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

- கதிர் -

# பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

## இலங்கை அரசிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்றும், புதிதாக உருவாக்கப்படும் சட்டம் மனித உரிமைகள் நியமனங்களுக்கு ஏற்புடையதாக அமைவதை உறுதிப்படுத்த சிவில் சமூகங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடர் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தீர்மானத்தை மேலும் இரு வருடகாலத்துக்கு காலநீடிப்பு செய்து நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இலங்கையின் மனித



உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 63 ஆவது கூட்டத் தொடரிலும், விரிவான அறிக்கை அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 66 ஆவது கூட்டத் தொடரிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், கூட்டத்தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் இலங்கை சார்பில் உரையாற்றிய ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் தஸநாயக்க, இன்னமும் தீர்வுகாணப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் உள்ளகக் கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆணையாளர் வோல்கர் டேர்க்கால் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கை பேரவையில் முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பாகக் குறிப்பிட்ட ஆணையாளர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்றும், இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் புதிதாக உருவாக்கப்படும் சட்டம் மனித உரிமைகள் சட்டத்துக்கு ஏற்புடையவாறு அமைவதை உறுதிப்படுத்துவதற்கு சிவில் சமூகத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.



# யாழ் பல்கலை ஊடகவியல் மாணவர்கள் 'லேக் ஹவுஸ்' நிறுவனத்துக்கும் விஜயம்

(அஷ்ரப் ஏ சமத்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவின் 3ஆம் ஆண்டில் ஊடகத்துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது கற்கை சம்பந்தமான கொழும்புச் சுற்றுப்பிரயாணத்தின் போது லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்துக்கும் விஜயம் செய்தனர்.

அப்போது எடுக்கப்பட்ட படம் இது.




# அவசரகால நிலையை நீடிக்கின்ற அதி விசேட வர்த்தமானி வெளியீடு

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொதுமக்கள் அவசர கால நிலைமை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் இதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பொதுமக்கள் அவசர கால நிலைமை கடந்த 28 ஆம் திகதி முதல் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அவசர கால நிலைமை காணப்படுவதை கருத்திற்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வளங்கள் மற்றும் தேவைகளை பேணுவதற்காக அவசர கால நிலைமை இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளதாக மேற்படி வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர கால விதிமுறைகளைப் பயன்படுத்தி மக்களின் சிவில் உரிமைகளை மீறும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி ஏற்கனவே உறுதியளித்திருந்தார்.

இதேவேளை15சேவைகளைஅத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியும் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம், எரிபொருள், சுகாதார சேவை, போக்குவரத்து, வீதிகள், நீர், உணவு, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கள அதிகாரிகள், அம்பியூலன்ஸ்கள், மத்திய வங்கி, அரச வங்கிகள், காப்பீட்டு சேவைகள், நீர்ப்பாசனம், தொலைபேசி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகங்கள், தாழ்நிலை மீட்பு, விவசாயம் மற்றும் விவசாய காப்பீட்டு ஆகிய சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

# மத்திய கிழக்கின் மோதல் நிலைமையால் இலங்கையில் சிக்கினர் சுற்றுலா பயணிகள்

## 10,000 இற்கும் அதிகமானோர் நாட்டில் தங்கியுள்ளனர்



மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை காரணமாக தமது நாடுகளுக்கு திரும்பிச்செல்ல முடியாத நிலையில் சுமார் 10,000 இற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் நாட்டில் தங்கியுள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவர்களில் 6000 பேர் வரையிலானோர் சுற்றுலா பெக்கேஜ்களின் கீழ் நாட்டிற்கு வருகை தந்தவர்கள் என அதன் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு தேவையான வசதிகள் சுற்றுலா பிரதிநிதிகளின் தலையீட்டின் அடிப்படையில் தற்போது வழங்கப்பட்டுள்ளன என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

தங்குமிட வசதிகள் அல்லது உணவு வசதிகள் தொடர்பில் சிக்கல்கள் காணப்படும்சுற்றுலாப்பயணிகள்1912என்றதுரித அழைப்பு இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

யுத்த நிலைமை காரணமாக தற்போது மூடப்பட்டுள்ள விமான நிலையங்களில் சிக்கியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகள் அந்தந்த விமான நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்தார்.

மோதல் நிலைமை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடிதங்கள் மற்றும் பொதிகளை விநியோகிக்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்படலாம் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளமையே இதற்கு காரணமாகும்.

இதன் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு கடிதங்கள் மற்றும் பொதிகளை அனுப்புவதற்கு முன்னதாக அது தொடர்பில் தபால் அலுவலங்களில் கேட்டறியுமாறு தபால் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.




# அஸ்வெசும பயனாளர்கள் தகவல்களை மீள் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை

அனைத்து அஸ்வெசும பயனாளர்களினதும் தகவல்களை மீண்டும் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

பிரதேச செயலக அதிகாரிகளால் அஸ்வெசும பயனாளர்களின் வீடுகளில் மீண்டும் ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சபையின் தலைவர் நிமல் கொடவெலகெதர தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட அஸ்வெசும பயனாளர்களின் தகவல்களை சமர்ப்பிக்குமாறு கோரிய போதும், இதுவரை சமர்பிக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 20ஆம் திகதி வரை அதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டிருந்தும் பெரும்பாலானோர் தகவல்களை சமர்ப்பிக்க தவறியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

தகவல்களை சமர்ப்பிக்க கோரியமை தொடர்பான விடயம் முறையாக பயனாளர்களை சென்றடையாமை மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் பயனாளர்களுக்கும் இடையிலான தொடர்பாடல் இடைவெளி உள்ளிட்ட சில பிரச்சினைகள் காரணமாக கூட தகவல்கள் சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக பிரதேச செயலக அலுவலக அதிகாரிகளால் அஸ்வெசும பயனாளர்களின் வீடுகளை மீள ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தகவல்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் பயனாளர்கள் கட்டமைப்பிலிருந்து நீக்கப்படக்கூடிய நிலை காணப்படுவதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் நிமல் கொடவெலகெதர மேலும் கூறியுள்ளார்.

# மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

மத்திய கிழக்கில் மோதல் இடம்பெறும் பகுதிகளில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் அவர்கள் தொடர்பான தகவல்களை ஆராய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

எந்தவொரு அவசர சந்தர்ப்பத்திலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் பணியகத்தினால் தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கூறியுள்ளது.

தொழிலாளர்களுக்கு ஏதேனும் தேவையேற்படின் உடனடியாக தாம் வசிக்கும் நாட்டின் தூதரகங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியுமென மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சேவையாற்றும் இலங்கையர்களுக்கு பணியகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

0094 704776008 எனும் Whatsapp இலக்கத்தின் ஊடாக 24 மணித்தியாலங்களும் பணியகத்துடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்க முடியும்.

பணியகத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1989 எனும் இலக்கத்தினூடாகவும் தகவல்களை வழங்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு வெளிவிவகார அமைச்சு பிராந்தியத்தில் உள்ள இலங்கையர்களுக்கு தொடர்ச்சியான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

+நம்பகமான உள்ளூர் ஊடகங்கள் மற்றும் அந்தந்த நாட்டின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளுக்கு அமைய செயற்படுதல்

+அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்த்தல் மற்றும் பொதுக் கூட்டங்களை தவிர்த்தல்.

+அருகிலுள்ள இலங்கை இராஜதந்திர தூதரகத்துடன் தொடர்ச்சியாக தொடர்பில் இருத்தல்.

+கையடக்கத் தொலைபேசிகளை சார்ஜ் செய்து வைத்திருத்தல்

+அனைத்து சந்தர்ப்பங்களிலும் செல்லுபடியாகும் அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்களை எடுத்துச்செல்லல் ஆகிய அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கையில் உள்ள குடும்பங்கள், மத்திய கிழக்கிலுள்ள தமது உறவினர்களின் நிலைமை தொடர்பில் அறிந்துகொள்வதற்காக 24 மணித்தியாலங்களும் சேவையில் ஈடுபடும் அழைப்பிலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய வெளிவிவகார அமைச்சின் தூதரகவிவகாரப்பிரிவின் 0742595546 எனும் இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
SRI LANKA BUREAU OF FOREIGN EMPLOYMENT




# 37 நாள்களுக்கு போதுமான பெட்ரோல் கையிருப்பில்

## பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் நேற்று முற்பகல் 9.45 வரை 23 லட்சத்து 25 ஆயிரத்து 349 லீட்டர் டீசலும், 29 லட்சத்து 4 ஆயிரம் லீட்டர் பெட்ரோலும் விநியோகிக்கப்பட்டுள்ளன என இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

37 நாள்களுக்கு போதுமான பெட்ரோலும் 35 நாள்களுக்கு போதுமான டீசலும் நாட்டில் கையிருப்பில் உள்ளன என பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டீ. ஏ. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லையென்பதால் அநாவசியமாக எரிபொருள் சேகரிப்பதை தவிர்க்குமாறு எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய டிப்போக்களிலும் விநியோக மத்திய நிலையங்களிலும் இன்றைய தினமும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரல்கள், பாரியளவான சேமிப்பு கொள்கலன்கள் மற்றும் போத்தல்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி கூறியுள்ளார்.

# எரிபொருள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பொய் தகவல் பரப்பினால் கடும் நடவடிக்கை

## பொலிஸார் எச்சரிக்கை

அநாவசியமாக எரிபொருள்களை சேகரித்து களஞ்சியப்படுத்துதல், எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்தல், எரிபொருள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களை பரப்புதல் என்பனவற்றுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராகசட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிலதரப்பினர்குழுக்களாக இணைந்து எரிபொருள் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என தகவல்கள் கிடைத்துள்ளதால் மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை மீன்பிடி படகுகள், தொழிற்பேட்டைகள், நிர்மாண தொழில் பணியிடங்கள், விவசாய நடவடிக்கைகளுக்காக அன்றி வேறு தரப்பினருக்கு பாரிய கொள்கலன்களிலோ, போத்தல்களிலோ எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்காமலிருப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலைய முகாமைத்துவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.






# வழமையை விட 1.5 மடங்கு அதிக எரிபொருள் சந்தைக்கு விநியோகம்

நாடளாவிய ரீதியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி எஸ். ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட தேவையற்ற பதற்றம் மற்றும் அளவுக்கு அதிகமான எரிபொருள் சேமிப்பு காரணமாகவே சில நிலையங்களில் தற்காலிகமாகக் கையிருப்பு தீர்ந்திருந்த போதிலும், நேற்று அதிகாலை முதல் விநியோக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று காலை 6 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட விநியோகப் பணிகள் ஊடாக, சாதாரண ஒரு நாளை விட 1.5 மடங்கு அதிக எரிபொருள் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, கொழும்பின் முக்கிய பகுதிகளில் எரிபொருள் வரிசைகள் எதுவும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், விநியோக வாகனங்களின் போக்குவரத்து காரணமாக சில இடங்களில் சிறிய தாமதங்கள் ஏற்படவாய்ப்புள்ளதேதவிர, தட்டுப்பாடு ஏற்பட வேறு எவ்வித காரணமும் இல்லை என அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தேவையற்ற பதற்றமடையாமல் தங்களுக்குத் தேவையான அளவு எரிபொருளை மட்டும் வழக்கம் போல் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொதுமக்கள் இவ்வாறு இயல்பாகச் செயற்படும் பட்சத்தில், நாளை காலைக்குள் எரிபொருள் விநியோகம் முழுமையாக வழமைக்குத் திரும்பும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் உறுதியளித்துள்ளார்.

# ஆரோக்கியா திட்ட செயற்பாடுகளிலிருந்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விலகல்




சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள “ஆரோக்கியா“ திட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலிருந்தும் நேற்று முதல் விலகுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தமது நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்காத காரணத்தினாலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகச் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் ஹன்சமால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

“ஆரோக்கியா திட்டத்தின் உண்மையான நோக்கம் என்ன? இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள்? இதற்கான சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டதா? என்பது குறித்து எங்களுக்கு எதுவும் தெரியாது” என வைத்தியர் ஹன்சமால் வீரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் சுகாதாரத் துறையில் பல பாரிய பிரச்சினைகள் இருக்கும்போது, பிரச்சினைகள் இல்லாத இடங்களில் தேவையற்ற புதிய பிரிவுகளைத் திறப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது என மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர்.

ஏற்கனவே உள்ள ஆரம்ப சுகாதாரக் கட்டமைப்பின் மேல், “ஆரோக்கியா” என்ற பெயரில் மற்றொரு சுமையை ஏற்றுவது தேவையற்றது எனவும், இது வெறும் அரசியல் விளம்பரத்திற்காக செய்யப்படும் ஒரு வேலை எனவும் அவர்கள் சாடியுள்ளனர்.

இந்த “ஆரோக்கியா” திட்டப் புறக்கணிப்பையும் சேர்த்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தற்போது மொத்தம் 7 வகையான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

“சுகாதாரத் துறையின் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்காமல், அரசியல் முகமூடியுடன் முன்னெடுக்கப்படும் இவ்வாறான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என எமது மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது” என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மக்களிடையே தொற்றா நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுப்பதற்காக நாடு முழுவதும் 1,000 ஆரம்ப சுகாதார மையங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு “ஆரோக்கியா” திட்டம் 2025 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்காக 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 1,500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.



# பருத்தித்துறையில் இடம்பெற்ற ரம்ழான் பண்டிகை சிறப்பு வழிபாடு

ரம்ழான் பண்டிகை கால சிறப்பு தொழுகை வழிபாடுகளும் நோன்பு திறப்பு நிகழ்வும் பருத்தித்துறையில் உள்ள பள்ளிவாசலில் இடம்பெற்று வருகிறது.

வடமராட்சி பகுதியில் வியாபார நடவடிக்கைகளுக்கா வந்திருக்கும் இஸ்லாமியர்கள் ரம்ழான் நோன்பை முன்னிட்டு பருத்தித்துறை மொகைதீன் ஹமீதியா ஜும்மா பள்ளியில் தொழுகை மேற்கொண்டு நோன்பு திறப்பிலும் பங்கேற்று வருகின்றனர்.

இவ்வாறு நேற்று முந்தினம் மாலை 6.23 மணிக்கு நோன்பு திறப்பு நிகழ்வு மற்றும் தொழுகஓ வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது கஞ்சி அருந்தி அன்றைய நோன்பு திறப்பு இடம்பெற்றது. தொடர்ந்து தொழுகையிலும் ஈடுபட்டிருந்தனர். இதன்போது பருத்தித்துறை நகர் உள்ளிட்ட வடமராட்சி பகுதியில் தங்கியுள்ள இஸ்லாமியர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்















# அவசர தொலைபேசி இலக்கம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டும் செயற்பாடு முன்னெடுப்பு

“அகன்று செல் முழு நாடும் ஒன்றாக“ விசேட போதை ஒழிப்பு விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் கீழ் அவசர தொலைபேசி இலக்கம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டும் செயற்பாடு பருத்தித்துறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆட்டோக்களில் இந்த ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடு நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்டது.

ஆட்டோ சாரதிகளுக்கு இது தொடர்பில் விளக்கிக்கூறப்பட்டதை தொடர்ந்து விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

இதன்போது பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, போக்குவரத்து தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி உப்புல் ஆனந்த அதிகாரி உள்ளிட்ட பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் பங்கேற்றிருந்தனர்.














# விஜய் மனைவி மீது அவதூறு பரப்புவோர் மீது கட்சி ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## த.வெ.கவுக்கு மாதர் சங்கம் வலியுறுத்தல்



த.வெ.க.தலைவர்விஜய்யின்மனைவி சங்கீதா மீது, த.வெ.க தொண்டர்களின் சமூக வலைதள தாக்குதலுக்கும், அதை கண்டிக்காமல் மௌனம் காக்கும் விஜய்க்கும்கண்டனம்தெரிவிப்பதாகஅனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் கூறியுள்ளது.

இது குறித்து அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தில் தலைவர் ஜி.பிரமிளா மற்றும் பொதுச் செயலாளர் அ.ராதிகா ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில்,

“திரைப்பட நடிகர் விஜய், தமிழக வெற்றிக் கழகம் கட்சியை தொடங்கி, பொது வாழ்வில் நேரடியாக செயல்பட்டு வருகிறார். இந்தச் சூழலில், விஜய்யின் இணையர் சங்கீதா, செங்கல்பட்டு குடும்ப நீதிமன்றத்தில், விஜயிடமிருந்து விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளமை ஒரு தனிப்பட்ட சட்ட நடைமுறை ஆகும்.

அது இரு நபர்களுக்கும், நீதிமன்றத்திற்கும் உரிய விஷயமே தவிர, அதை சமூக வலைதளங்களில் இழிவுபடுத்தி, ஆபாசமாக விவாதிக்கும் உரிமை யாருக்கும் இல்லை.

ஆனால், விஜய்யின் பெயரைச் சொல்லிக் கொண்டு இயங்கும் அக்கட்சியின் தொண்டர்கள் சமூக வலைதளங்களில் சங்கீதாவை குறிவைத்து, ஆபாசமான, இழிவான ஆணாதிக்க சமூக வலைதள வன்முறை பதிவுகள், கேலிச்சித்திரங்கள் போன்றவற்றை தொடர்ந்து பரப்பி வருகின்றனர்.

# ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் இணைப்பு விழா: மதுரையில் ஸ்டாலின் தலைமையில் நிகழ்வு

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தி.மு.கவில் இணைந்த நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள தன்னுடைய ஆதரவாளர்களை அக்கட்சியில் இணைக்கும் விழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மதுரை அருகே எதிர்வரும் 7ஆம் பிரம்மாண்டமாக நடத்த ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம், எவ்வித நிபந்தனையும் இன்றி அ.தி.மு.கவில் இணையதயாராக இருக்கிறேன் என்று தொடர்ந்து தெரிவித்து வந்தார். ஆனால் கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி, எக்காரணம் கொண்டும் அவரை சேர்த்துக் கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். அதனால், வேறு வழியில்லாமல் அ.தி.மு.கவில் 3 முறை முதல்வராக பதவி வகித்திருந்தபோதும், ஜெயலிதாவின் விசுவாசத்துக்கு அடையாளமாக கூறப்பட்ட ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.கவின் பரம எதிர்க்கட்சியாக கருதப்படும் தி.மு.கவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இணைந்தார்.

அவருடன் அவரது மகன் ரவீந்திரநாத், உசிலம்பட்டி எம்.எல்.ஏ. ஐய்யப்பன், மதுரை முன்னாள் எம்.பி. கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோரும் சேர்ந்தனர்.

ஓ.பன்னீர்செல்வத்தின் வாக்கு வங்கி, செல்வாக்கு போன்றவற்றை கருத்தில் கொண்டு தி.மு.க தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், அவரை தி.மு.கவில் இணைத்துக்கொள்ள மிகுந்த ஆர்வமாக இருந்தார். ஓ.பன்னீர் செல்வத்துடன் இணைந்த அவரது ஆதரவாளர்களுக்கு காலப்போக்கில், பதவிகள் அல்லது அடுத்து வரக்கூடிய உள்ளாட்சி தேர்தலில் உரிய அங்கீகாரமும், கட்சிப்பதவிகளும் வழங்க தி.மு.க. தலைமை உறுதி அளித்துள்ளது.



இந்நிலையில் தமிழகம் முழுவதும் உள்ள தனது ஆதரவாளர்களை தி.மு.கவில் இணைக்கும் பணிகளில் ஓ.பன்னீர் செல்வமும், அவரது ஆதரவாளர்களும் ஈடுபட்டுள்ளனர். இந்த இணைப்பு விழா, தமிழகம் முழுவதும் உள்ள அவரது ஆதரவாளர்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் மதுரைக்கு அருகே எதிர்வரும் 7 ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான இடத்தை தேர்வு செய்யும் பணியை முன்னாள் எம்.பி. கோபால–கிருஷ்ணன் செய்து வருகிறார்.

# ஈரான் ஆதரவு போராட்டங்களை முடக்க மத்திய அரசு முனைகிறது

## இந்திய கொம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு




ஈரான் ஆதரவு போராட்டங்களை மத்திய பா.ஜ.க. அரசு முடக்க முயற்சிப்பதாக இந்திய கொம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளுக்கு எதிராக ஈரான் மீது போர் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் இராணுவம் தொடுத்துள்ளன. இது ஈரானின் இறையாண்மைக்கு எதிரானது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சர்வாதிகாரப் போக்குடன் செயல்படுகிறார். அமெரிக்க காங்கிரஸின் இரு அவைகளின் அனுமதி இன்றியே, ஈரான் மீதான போரை ட்ரம்ப் தொடங்கியுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை கண்டிப்பதற்கு இந்திய அரசு தயங்குகிறது. அமெரிக்கா – இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானும் மேற்காசியாவில் உள்ள அமெரிக்காவின் இராணுவத் தளங்களை தாக்கி வருகிறது. இதனால் இந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகி உள்ளது. மேற்காசிய நாடுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்தெல்லாம் கவலைப்படாத இந்திய மத்திய அரசு, அமெரிக்க – இஸ்ரேல் அட்டூழியத்தைக் கண்டிக்க துணிவு இல்லாமல், தற்போது அனைத்து மாநிலங்களுக்கும் உள்துறை அமைச்சகம் மூலம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், இந்தியாவில் நடைபெறும் ஈரானுக்கு ஆதரவான போராட்டங்களை கண்காணிக்குமாறும், போராடும் அமைப்புகள் மற்றும் குரல் கொடுக்கும் தனிநபர்களை கண்காணிக்குமாறும் வலியுறுத்தியுள்ளது. இது ஈரானுக்கு ஆதரவான போராட்டங்களை முடக்கும் நோக்கம் கொண்டது.

இஸ்ரேல் ஆதரவு நிலையை மோடி அரசு மேற்கொண்டு வருகிறது. ஈரான் ஆதரவு போராட்டங்களையும் முடக்க முனைகிறது. எனவே இந்திய மக்கள், போருக்கு எதிரான இயல்பான மனநிலையுடன் ஈரானுக்கு ஆதரவாகவும், அமெரிக்க – இஸ்ரேலிய அரசுகளைக் கண்டித்தும் போராட்டம் நடத்துகின்றனர். இந்தப் போராட்டங்களை முடக்க நினைப்பது எதேச்சதிகார நடவடிக்கையாகும். இந்த ஜனநாயக விரோதப் போக்கை உடனடியாக மோடி அரசு கைவிட வேண்டும்.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.










# அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதலில் ஈரானில் இதுவரை 555 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்தி வரும் வான்வழி தாக்குதல்களில் ஈரானில் இதுவரை 555 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானின் 'ரெட் க்ரெசன்ட் சொசைட்டி' நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில், இஸ்லாமியக் குடியரசான ஈரானை இலக்காகக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் குறைந்தது 555 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை 131 நகரங்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் நடன்ஸ் யூரேனியம் செறிவூட்டும் நிலையத்தின் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியதாக ஐ.நா. அணு அமைப்பில் ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.ஏ.யு.ஏ. (International Atomic Energy Agency) அமைப்பில் ஈரானின் தூதராக உள்ள ரெசா நஜாபி , "அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்ட சட்டவிரோத மற்றும் கொடூரமான தாக்குதல்களை நான் கண்டிக்கிறேன்." என்று தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"ஈரானின் அமைதியான மற்றும் பாதுகாப்பான அணு நிலையங்களை அவர்கள் நேற்றும் தாக்கினர். ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க முயல்கிறது என்ற அவர்களின் கூற்று மிகப் பெரிய பொய்." என்று தெரிவித்தார்.

எனினும், அந்த இடத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலும் அமெரிக்காவும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்கள் காரணமாக ஈரானின் எந்த ஓர் அணு நிலையமும் சேதமடைந்ததாக தகவல் இல்லை என ஐ.ஏ.இ.ஏ. (IAEA) அமைப்பின் தலைவர் ரஃபேல் குரோஸி தெரிவித்துள்ளார்.

35 நாடுகள் அடங்கிய நிர்வாக சபையில் அவர் வெளியிட்ட அறிக்கையில், "எந்த அணு நிலையங்களும் சேதமடைந்ததாக அல்லது தாக்கப்பட்டதாக எங்களிடம் எந்தச் சான்றும் இல்லை." என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "ஈரானின் அணு ஒழுங்குமுறை அதிகாரிகளை தொடர்புகொள்ளும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனினும், இதுவரை எந்த பதிலும் இல்லை" என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் (ஐ.ஆ.ர்.ஜி.சி) தலைமையகத்தை அழித்துவிட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.







# போரைத் தொடங்கவில்லை ஆனால் முடித்து வைப்போம்

## அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு



ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் ஆட்சி மாற்றத்திற்காக முன்னெடுக்கப்படுபவை அல்ல என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தற்போதைய சூழலில் ஈரானின் தலைமைத்துவம் மாறியுள்ளதை ஏற்றுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இது ஒரு ஆட்சி மாற்றத்திற்கான போர் அல்ல, ஆனால் அங்கு ஆட்சி நிச்சயம் மாறிவிட்டது.

இதனால் உலகம் இப்போது சிறந்த இடமாக மாறியுள்ளது” எனவும் பீட் ஹெக்செத் தெரிவித்தார்.

அமெரிக்கா இந்தப்போரைத்தொடங்கவில்லை என்றும் பல தசாப்தங்களாக அமெரிக்காவுக்கு எதிராக ஈரான் முன்னெடுத்து வந்த ஒருதலைப்பட்சமான போரை, ஜனாதிபதி ட்ரம்பின் தலைமையின் கீழ் அமெரிக்கா தற்போது முடிவுக்குக் கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது இதுவரை உயிரிழந்துள்ள நான்கு அமெரிக்க சிப்பாய்களின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்திப்பதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மிகச்சிறந்த வீரர்கள் அவர்கள். அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், எவ்வித தயக்கமும் மன்னிப்பும் இன்றி இந்த நடவடிக்கையைத் தொடர்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், அமைதியான அணுசக்தி அபிலாஷைகளைமலைகளுக்குஅடியில் மறைத்து வைக்கத் தேவையில்லை எனக் குறிப்பிட்ட அவர், கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட 'Operation Midnight Hammer' மூலம் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் அழிக்கப்பட்டதாக நினைவு கூர்ந்தார்.

ஒபாமா ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தம் ஒரு மோசமான ஒப்பந்தம் எனச் சாடிய ஹெக்செத், ஈரான் பொய்களைக் கூறி அணு ஆயுதங்களைத் தயாரிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டினார்.

“ஈரான் எமது தலையில் துப்பாக்கியை வைத்திருந்தது. ஜனாதிபதி ட்ரம்ப் இத் விளையாட்டுகளை விளையாட மாட்டார்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

முடிவாக, இது ஒரு முடிவில்லாத போர் அல்ல என்றும், ஈரானின் ஏவுகணைகள் மற்றும் பாதுகாப்பு உட்கட்டமைப்புகளை அழிப்பதே அமெரிக்காவின் இலக்கு என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

# ஈரானின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க முடியாது

## சீனா பகிரங்க ஆதரவு



மத்திய கிழக்கில் போர் பதற்றம் உச்சமடைந்துள்ள சூழலில், ஈரானின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் தாங்கள் முழுமையான ஆதரவை வழங்குவதாக சீனா அறிவித்துள்ளது.

ஈரானிய வெளிவிவகார அமைச்சருடனான உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் போது, சீன வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளதாக சீன அரசு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண நிலைமைகளுக்கு மத்தியில் ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீடுகளை நிராகரிப்பதாகவும், ஈரானின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் இராஜதந்திர ரீதியில் சீனா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் இந்தப் பேச்சுவார்த்தையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் ஈரானுடன் நீண்டகால நட்புறவைக் கொண்டுள்ள சீனா, தற்போதைய நெருக்கடியான கட்டத்தில் ஈரானுக்குப் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ளமை சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

# உதவ வந்த அமெரிக்க விமானங்களை தவறுதலாக சுட்டுவீழ்த்தியது குவைத்





குவைத்தின் வான் பாதுகாப்புப் படையினரால் அமெரிக்காவின் மூன்று F-15E ஸ்ட்ரைக் ஈகிள் போர் விமானங்கள் தவறுதலாகச் சுடப்பட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் O1 தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், அந்த விமானங்களில் இருந்த ஆறு விமானிகளும் பாதுகாப்பாக வெளியேறியதுடன், அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் ஆரோக்கியத்துடன் உள்ளனர் என எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை குவைத் ஒப்புக்கொண்டுள்ளநிலையில், மீட்புப்பணிகளில் குவைத் பாதுகாப்புப் படைகள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு அமெரிக்கா நன்றியைத் தெரிவித்துக்கொண்டது.

மேற்படி சம்பவத்துக்கான காரணம் குறித்து தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், மேதிக தகவல்கள் பின்னர் வெளியிடப்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்-03.03.2026




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிபடுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்..




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 03.03.2026




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொணடால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.




இன்று தன்னம்பிக்கை குறைவாகவும், நம்பிக்கையின்மையும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி மற்றும் உயரழுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



இன்று பல உற்சாகமான தருணங்களை நீங்கள் சந்திக்கலாம்.புதியகட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# தாக்குதலுக்கு இலக்காகி யாழில் ஒருவர் உயிரிழப்பு

## சந்தேகநபர் ஒருவர் கைது



பிறந்தநாள் நிகழ்வொன்றுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் திடீரென உயிரிழந்த நிலையில், தாக்குதல் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. அதையடுத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பரமநாதன் செந்தில்நாதன் (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற மனைவியின் உறவினர் ஒருவரின் பிறந்த நாள் நிகழ்வுக்காக இவர் வீமன்காமத்துக்கு வந்திருந்தார். அன்றைய தினம் இரவு மனைவியின் சகோதரர்களுக்கும், இவருக்கும் இடையே மதுபோதையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்தநிலையில் மறுநாள் திடீர் சுகவீனம் என்று தெரிவித்து அவர் உறவினர்களால் தெல்லிப்பளை மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார் என்றும், ஆயினும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் அவரது உடலில் அடிகாயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தாக்குதலுக்கு இலக்காகியே அவர் உயிரிழந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.